உ

**சந்தோஷம்**

**ஸ்ரீ குருப்யோ நம:**

      

# ஓங்கார ஆசிரமம்

# பரப்பிரம்ம பரமகுரு சித்தர் சுவாமிகள் அதிஷ்டான அஷ்டபந்தன நூதன மகா கும்பாபிஷேக அழைப்பிதழ்

குருப்ரஹ்மா குருர் விஷ்ணுஹு குருர் தேவோ மஹேச்வரஹ
குருஸ் ஸாக்ஷாத் பரம் ப்ரஹ்ம தஸ்மைஸ்ரீ குருவே நமஹ
குருவே ஸர்வ லோகானாம் பிஷஜே பவரோகிணாம்
நிதயே ஸர்வ வித்யானாம் தஷிணாமுர்த்தயே நமஹ
ச்ருதி ஸ்ம்ருதி புராணானாம் ஆலயம் கருணாலயம்
நமாமி பகவத் பாத சங்கரம் லோகசங்கரம்

எல்லாம் செயல்கூடும் என்னாணை அம்பலத்தே
எல்லாம் வல்லான் தனை யேற்று
**- அருட் பிரகாச வள்ளலார்**

**ஏக வணக்கம்**
ஒன்றே ஒன்றாய் உலகாய் விரிந்து
ஒன்றே ஒன்றாய் உயிராய் உருவாய்
ஒன்றே உணர்வாய் உறவாய் உவப்பாய்
ஒன்றே ஐந்தாய் விதியாய் கதியாய்
ஒன்றே அறிவாய் அருளாய் அன்பாய்
ஒன்றே பரமாய் இகமாய் அனைத்துமாய்
ஒன்றே சிவமாய் சக்தியாய் சிவசக்தியாய்
ஒன்றில் ஒன்றாய் ஒன்றி வணங்கிடுவோம்
**- தவத்திரு சுவாமி ஓங்காரநந்தா**

**விநாயகர் துதி**
சித்தி தரும் பரகதி உண்டாம் நல்ல செல்வமும் உண்டாம்
புத்தி தரும் புகழ் பெருகும் பணிவோர்க்கெல்லாம்
முக்தி தரும் திரிபுரை வாலைதனை மொழிந்துரைக்க
வித்தை தரும் வெள்ளை விநாயகர் காப்பதுவே

தெளிவு குருவின் திருமேனி காண்டால்
தெளிவு குருவின் திருவார்த்தைக் கேட்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவுருவை சிந்தித்தல்தானே

ஒங்காரத்துள்ளே யுதித்த ஐம்பூதங்கள்
ஒங்காரத்துள்ளே யுதித்த சராசரம்
ஒங்காரத் தீதத்துயிர் மூன்றும் உற்றன
ஓங்கார சிவ பரசிவ ரூபமே.

**சிவ துதி**
மானுடராக்கை வடிவு சிவலிங்கம்
மானுடராக்கை வடிவு சிதம்பரம்
மானுடராக்கை வடிவு சதாசிவம்
மானுடராக்கை வடிவு திருக்கூத்தே
**- திருமூலர்**

பெற்றதாய் தனை மகன் மறந்தாலும்
பிள்ளையைப் பெறும் தாய் மறந்தாலும்
உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்
உயிரை மேவிய உடல் மறந்தாலும்
கற்ற நெஞ்சகம் கலை மறந்தாலும்
கண்கள் நின்றிமைப்பது மறந்தாலும்
நற்றவத்தவர் உள்ளிருத்தோங்கும்
நமச்சிவாயத்தை நான் மறவேனே
**- அருட் பிரகாச வள்ளலார்**

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டம் எல்லாம்
பூத்தாளை மாதுளம் பூ நிறத்தாளை புவி அடங்கக்
காத்தாளை அங்கையில் பாசாங்குசமும் கரும்பு வில்லும்
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே
**- அபிராமிபட்டர்**

**ஆஞ்சநேய துதி**
அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்றாறாக ஆரியர்க்காகி ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டு அயலாரூரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன் எம்மையளித்து காப்பான்.
**- கம்பர்**

அருளன்புடையீர்

சந்தோஷம். உலகத்து உயிர்கள் என்றும் சுத்த சந்தோஷத்துடன் வாழ்வதற்காக ஓங்கார ஆசிரமம் என்ற ஞானக்குடில் தோன்றியது. ஓங்கார ஆசிரமத்தை மகா சித்தர் சற்குரு மகராஜ் பரப்பிரம்ம **பரமகுரு ஓம் ஸ்ரீ சித்தர் சுவாமிகள்** 1960-இல் தமது அவதாரத் திருநாள் அன்று **"ஓங்கார ஆசிரமம்"** என்ற அருள் நாமத்தோடு வெளிப்படுத்தினார். அவர் திருவாக்காலே இது உதயமாயிற்று. 1962 ஜனவரி 19 அன்று சுவாமிகளின் பிரதான சீடரான **தவத்திரு சுவாமி ஓங்கார நந்தா**வை அழைத்து ஓங்கார ஆசிரமம் உனது ஞானப் பணிக்காகட்டும். இதைப் பொறுப்பேற்று நிஷ்காமிய நிலையில் செயல்படுவாயாக என்று ஆக்ஞை பிறப்பித்து ஆசி வழங்கினார். இந்த ஓங்காரப் பீடத்திலிருந்து "சத்சித் ஆனந்த ஒளிவீச உலகளாவிய நிஷ்காமியப் பணியை உன் சாயுச்சியம் வரை செய்வாயாக, சத்தியம், தர்மம், நியாயத்தை நிலைநாட்டுவாயாக. இப்பணிக்கு என் பரிபூரண ஆசிகள்" என்று திருவாய் மலந்தருளினார். பரமகுரு மகராஜ் ஓம்ஸ்ரீ சித்தர் சுவாமிகள் 31.8.1964 அன்று மயிலாடுதுறையில் மகா சமாதி அடைந்தார். பரமகுரு ஓம்ஸ்ரீ சித்தர் சுவாமிகளுக்கு அவர் அவதரித்த சீனிவாசநல்லூரில் அதிஷ்டானமும், சற்குரு நூற்றாண்டு நினைவு நுழைவு வாயிலும், அவ்வூரிலேயே அருள்மிகு உமா மகேஸ்வரர் திருக்கோயிலுக்கருகே தியான மண்டபமும், தியான மண்டபத்தின் பக்கத்தில் ஓங்கார ஆசிரமக் கட்டிடமும், புதுப்பட்டினத்தில் சற்குரு ஞான சித்தர் ஆலயமும், செஞ்சிக் கருகேயுள்ள காரை என்ற கிராமத்தில் ஒரு திருக்கோயிலும், பி.முட்லூரில் (சிதம்பரம் பரங்கிப்பேட்டைக்கருகில்) சற்குரு தியான மண்டபமும் உள்ளன. மத்திய அரசு பரமகுரு ஓம்ஸ்ரீ சித்தர் சுவாமிகளைக் கௌரவிக்கும் பொருட்டு (ஓம்ஸ்ரீ சித்தர் சுவாமிகளின் நூற்றாண்டு) **சிறப்பு அஞ்சல் தலை** ஒன்றும் வெளியிட்டுள்ளது. அவர்களின் பிரதான சீடர் பரமகுரு சித்தர் சுவாமிகளுக்கு "**உலக மகா சித்தர் வருகை**" , "**மகா சித்தர்**" என்ற இரு நூல்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிட்டுள்ளார்கள்.

பரமகுரு ஓம்ஸ்ரீ சித்தர் சுவாமிகள் உலகத்து உயிர்கள் எல்லாம் என்றும் இன்புற்று வாழ, சாதகர்களுக்கு ஞானப் பயிற்சி அளித்து வந்தார்கள். அதையே பிரதான சீடரான தவத்திரு சுவாமி ஓங்கார நந்தா அவர்களுக்கு ஆக்ஞையாகப் பிறப்பித்தார்கள். அவ்வாக்ஞைப்படி பிரதான சீடர் ஓங்கார ஆசிரமத்தின் மூலம் நிஷ்காமியப் பணியினை ஆற்றி வருகிறார்கள்.

**முதல் உலக மகா பூஜை:** 1987 மார்ச் 25,26,27 தேதிகளில் 108 யானைகளை வைத்து (கஜபூஜை) மகா கணபதிக்கு பிரமாண்டமான பூஜையினை கோயம்புத்தூரில் நடத்தினார்கள்.

**இரண்டாவது உலக மகா பூஜை:** 1991 மே 11,12,13 தேதிகளில் திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் கோயிலில் 7000 சாதுக்கள், சந்நியாசிகள், மடாதிபதிகள் மற்றும் சிவனடியார்களைக் கொண்டு ஒரே இரவில் ஒரு கோடி சிவ பஞ்சாட்சர ஜெபம் செய்யப்பட்டது. மகா கிரிவல பூஜையோடு அஷ்ட நந்திகளுக்கு பூஜை, அஷ்ட லிங்கம், அஷ்ட பாதம், மலைக்கும், மலைப்பாதைக்கும் பூஜை மற்றும் 2000 சாதுக்கள், சந்நியாசிகளுக்கு மகேசுவர பூஜை நடத்தப்பட்டது. இதன் சம்பூரண பூஜை - 1991 ஆகஸ்ட் 15,16,17 தேதிகளில் காஞ்சீபுரத்தில் 700 க்கும் மேற்பட்ட சிவலிங்கங்களுக்கு அபிஷேக ஆராதனைகளும் மச்சேஸ்வரர் கல்யாண மண்டபத்தில் ஆன்மீக மாநாடும் நடத்தப்பட்டது.

**மூன்றாவது உலக மகா பூஜை:** 30.8.1993 அன்று 108 சுமங்கலிப் பிரார்த்தனை பூஜை நடைபெற்றது. 31.8.1993 அன்று 87 வயதான சுவாமிகளின் அன்னைக்கு (ஸ்ரீலஸ்ரீ மாதாஜி சித்தர்) சதாபிஷேகமும், அன்றே பரமகுரு ஸ்ரீ சித்தர் சுவாமிகளின் குருபூஜையும் நடத்தப்பட்டது. 1.9.1993 அன்று **தென்னகத்தின் முதல் கும்பமேளா** பாண்டிச்சேரியில் நிகழ்த்தப்பட்டது.

பாண்டிச்சேரியில் 42 ஆண்டுகளாக சித்ரா பௌர்ணமி நாளில் வெட்ட வெளி தியானம் தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது. 49 குருபூஜை நிகழ்வுகளும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 13 மகா ருத்ர பூஜை நிகழ்வுகளும் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 25 நிகழ்ந்து வருகிறது. 36 ஞான தீப வழிபாடும் 12 ராஜ ராஜேஸ்வரி (புதுப்பட்டினத்தில்) ஊர்வலமும் 22 மகா கிரிவல பூஜையும் (திருவண்ணாமலை) 370க்கும் மேற்பட்ட சிவ அமுது நிகழ்வுகளும் இவ்வாசிரமத்தில் நிகழ்ந்து வருகிறது. சனாதன தர்மம் காட்டும் அனைத்து தெய்வங்களுக்கும் முறைப்படி பூஜைகளும், யாகங்களும் அனைத்து உயிர்களும் இன்புற்றிருக்க மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**அருள்மிகு மாதாஜி சித்தர்:** 50 காமாட்சியம்மன் கோயில்தெரு, புதுவை ஓங்கார ஆசிரமத்தில் 1998 ஆம் ஆண்டு நவம்பர் 25 ஆம் தேதி சிவ சாயுச்சியம் அடைந்தார். அவ்விடம் புனிதமாகப் பாதுகாக்கப்பட்டு மாதாஜி சித்தர் அதிஷ்டானமாக வைக்கப்பட்டு தினந்தோறும் பூஜைகள் நிகழ்ந்து வருகின்றது. வள்ளல் பெருமானுக்கு வடலூர் மேட்டுக் குப்பத்தில் எப்படி திருக்காப்பு இட்ட அறை தெய்வீகமாகப் பாதுகாக்கப்படுகிறதோ அதே போன்று மாதாஜி சித்தர் சிவ சாயுச்சியம் அடைந்த அறையும் போற்றி, வணங்கி பாதுகாக்கப்படுகிறது. தவத்திரு சுவாமி ஓங்கார நந்தா அவர்கள் தமது அன்னைக்கு அழகான தெய்வீக மயமான, சுந்தரமான சுடுகாடு கட்டியுள்ளார். அன்னைக்குப் புதுவையில் அதிஷ்டானமும் புதுப்பட்டினத்தில் ஒரு திருக்கோயிலும் உள்ளது. "**இருபதாம் நூற்றாண்டின் இறுதிச் சித்தர்**" என்ற ஒரு தெய்வீக நூலும் அருளியுள்ளார். அன்னையின் ஞான தீட்சா நாமம் **ராஜ நாராயண நந்தா சுவாமிகள்** என்பதாகும். மாதாஜி சித்தரின் மூல மந்திரம். **"ஓம் நமோ பகவதே ஸ்ரீ ராஜ நாராயண நந்தாய நம"**.

**சீனிவாசநல்லூர்:** சீனிவாசநல்லூர் ஒரு சிறந்த தெய்வீக கிராமமாகும். அறிவு சக்தியும் அருள்சக்தியும் நிறைந்த மெய்ஞ்ஞான பூமியாகும். அன்புள்ளம் கொண்ட மக்கள் அதிகமாக உள்ளனர். இச்சிற்றூரில் நாட்டாறு, அரசலாறு, கீர்த்திமானாறு என்ற 3 நதிகள் ஓடுகின்றன. இங்கு 5 கோயில்கள் உள்ளன. அருள்மிகு உமா மகேசுவரர் திருக்கோயில் கிட்டத்தட்ட 700 ஆண்டுகளுக்கு முற்பட்டது. 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. 3ஆம் ராஜராஜ சோழன் கட்டியதாகத் தெரியவருகிறது. இங்குள்ள முக்கியச் சாலையில் விநாயகர் கோயில் ஒன்றுள்ளது. அருள்மிகு செல்லியம்மன் கோயில் இங்கு புகழ் பெற்றுள்ளது. ஐயனாருக்கென்று ஒரு சிறந்த கோயில் உள்ளது. சற்குரு சித்தர் சுவாமிகளின் குல தெய்வமான அருள்மிகு கருப்பசாமி மகா சக்தியோடு செல்வத்திற்குச் சொந்தமான கருப்ப சாமி தோட்டத்தில் கோயில் கொண்டுள்ளார். சற்குரு சித்தர் சுவாமிகள் மோடி வைத்த மோடித் திருக்குளம் இங்குதான் உள்ளது. இது அரசியல் செல்வாக்கு பெற்ற பொது நல பூமி. தெய்வீகப் பற்றுடன் கோயில் பணிகளை அவர்களே எடுத்துச் செய்கிறார்கள்.

சுமார் இரண்டு கி.மீ தூரமுள்ள கிராமம். ஒரு சித்த மகாபுருஷர் அவதரித்துள்ளார். சீமானூர் என்றும் சித்தர் புரம் என்றும் அழைக்கப்படும் சீனிவாசநல்லூர் கிழக்கு வீதியில் இரத்தினசாமி அடிகளுக்கும், தனபாக்கியம் அம்மைக்கும் மகனாகப் பிறந்தார் சித்தர் சுவாமிகள். அவர் மகா வல்லபம் பொருந்தியவர். வாதம், யோகம், மாந்த்ரீகம், மருத்துவம் மற்றும் தற்காப்புக் கலைகளில் சிறந்த வல்லபம் பெற்றிருந்தார். ஆத்ம தரிசனம் பெற்றவர். மகா ஜீவன் முக்தி அடைந்தவர். ஏழைகளுக்கு மருத்துவ உதவி செய்தவர். சித்த மருத்துவத்தில் வல்லவர். சித்தர் சுவாமிகளைப் பற்றி பல பத்திரிக்கைகள் பாராட்டியுள்ளன.

இத்தகைய சிறப்பு மிக்க பூமியில்தான் **பரமகுரு சித்தர் சுவாமிகளின் அதிஷ்டானம் நிர்மாணிக்கப்பட்டு மகா கும்பாபிஷேகம் 24.5.2013 அன்று நடைபெறவுள்ளது.**

பரிசுத்தம், பரிபூரணம், பரசிவ ஐக்கியம் இவையே ஆன்மிகத்தின் படிகளாகும். உலகையே ஆன்மிக மயமாக்குதல், மனிதனிலுள்ள ஒவ்வாத குணங்களை நீக்கி அவனை முழு மனிதனாக்குதல், முழு தெய்வமாக்குதல், அதிலிருந்து அவனை வெட்ட வெளியில் ஐக்கியமடையச் செய்தல், துறவிகள் சாதுக்கள் மற்றும் மக்களையும் அழைத்து அவர்களை தவம் செய்யச் செய்து அந்தத் தவ

சக்தியின் மூலம் அண்ட வெளியில் ஞான சக்தியைப் பெருக்கி, மக்கள் செய்யும் அதர்ம சக்திகளின் வலுவைக் குறைத்து அண்ட வெளி முழுவதும் அன்பையும் ஆனந்தத்தையும் பெருக்குதல். அதன் மூலம் உலகத்து உயிர்களை இன்புறச் செய்தல் போன்றவைகள் ஓங்கார ஆசிரமத்தின் கொள்கைகளாக உள்ளன. மக்களை உயர் மெய்ஞானப் பெருநிலைக்கு உய்விக்க சுவாமிகள் இதுவரை 12க்கும் மேற்பட்ட பாரத யாத்திரைகளும், வெளிநாட்டுப் பயணமாக, சிங்கப்பூர், மலேசியா, இத்தாலி, பெல்ஜியம், நெதர்லாந்து, பிரான்ஸ், அமெரிக்க ஐக்கிய நாடுகள், இலங்கை மற்றும் நேபாளம் போன்ற நாடுகளுக்கும் விஜயம் செய்துள்ளார்கள்.

சுமார் 55க்கும் மேற்பட்ட ஆன்மீக நூல்களை அருளியுள்ளார்கள். கடந்த 41 ஆண்டுகளாக **ஓங்காரம்** என்ற ஆன்மீக மாத இதழை நடத்தி வருகிறார்கள். வானொலியிலும், தொலைக் காட்சியிலும் அருளுரைகள் வழங்கியுள்ளார்கள்; வழங்கிவருகிறார்கள்.

22.05.2013 புதன்கிழமை அன்று முதல் யாக சாலை பூஜையும் மற்ற ஏனைய நிகழ்ச்சிகளும் நிகழ்ச்சி நிரலிலுள்ள படி சிறப்பாக நடைபெறும். எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவுளப் பாங்கின்படி, பரப்பிரம்ம பரமகுரு ஓம் ஸ்ரீ சித்தர் சுவாமிகளின் அருளாசியோடு நடைபெறும். ஆகவே இத்தெய்வீக நிகழ்வு சற்குரு ஓம் ஸ்ரீ சித்தர் சுவாமிகளின் அவதார பூமியான சீனிவாச நல்லூரில் நடைபெறுவது பெருமைக்குரியதாகும்.

இவ்வழைப்பிதழைக் கண்ணுரும் அனைத்துப் பெருமக்களும் சந்தோஷமாகக் கலந்து கொள்ள வருமாறு ஓங்கார ஆசிரமம் அன்போடு அழைக்கிறது.

வருக வருக வாழ்வனைத்தும் தெய்வீகமே
வருக வருக வாழ்வனைத்தும் சந்தோஷமே
வருக வருக வாழ்வனைத்தும் பரிபூரணமே
வருக வருக வாழ்வனைத்தும் சின்மயமே

திருச்சிற்றம்பலம்

அன்பு

**சிவஸ்ரீ குமார் ராகவன்**
**தலைவர், சற்குரு சித்தர் சுவாமிகள் அதிஷ்டானம்**
**சீனிவாசநல்லூர்.**

**தவத்திரு சுவாமி ஓங்கார நந்தா அவர்கள்**
**பரப்பிரம்ம சற்குரு ஓம் ஸ்ரீ சித்தர் சுவாமிகளின் தொண்டன், மகாதிபதி ஓங்கார தலைமைப் பீடம்,**
**ஓங்கார ஆசிரமம், புதுச்சேரி, சீனிவாச நல்லூர்.**

**சந்தோஷமே மூச்சு** **சந்தோஷமே தாரக மந்திரம்** **சந்தோஷமே வாழ்வு** **சிவதரிசனமே சுத்த சந்தோஷம்**

நிகழும் மங்கள கரமான விஜய ஆண்டு வைகாசி மாதம் 10ஆம் தேதி 24.05.2013 வெள்ளிக் கிழமை காலை சதுர்த்தசி திதி, விசாக நட்சத்திரம், சித்த யோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் சுக நேரத்தில் 6 மணியிலிருந்து 7:30 மணிக்குள் சீனிவாச நல்லூரில் (கும்பகோணத்திற்கருகே) உள்ள பரப்பிரம்ம பரமகுரு ஓம் ஸ்ரீ சித்தர் சுவாமிகள் அதிஷ்டான அஷ்டபந்தன நூதன மகா கும்பாபிஷேகம் நிகழ்ச்சி நிரலின்படி நடைபெறும்.

## நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| வைகாசி 8 (22.5.2013) புதன் கிழமை | காலை 9.00 மணிக்கு | அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, மஹா சங்கல்பம், கணபதி ஹோமம், நவக்கிரஹ ஹோமம், லக்ஷ்மி ஹோமம், வாஸ்து பூஜை, ம்ருத் சங்க்ரஹனம் |
| | காலை 12 மணிக்கு | பூர்ணாகுதி, தீபாராதனை |
| | மாலை 6.00 மணிக்கு | அங்குரார்பணம், ரக்ஷாபந்தனம், கும்பஅலங்காரம், யாகசாலை ப்ரவேசம், முதல் கால பூஜை ஆரம்பம் |
| | இரவு 8.30 மணிக்கு | பூர்ணாகுதி தீபாராதனை, ப்ரசாதம் வழங்குதல், |
| வைகாசி 9 (23.5.2013) வியாழன் கிழமை | காலை 8.30 மணிக்கு | இரண்டாம் கால பூஜை ஆரம்பம், திரவ்யாகுதி ஹோமம் |
| | மதியம் 11.30 மணிக்கு | பூர்ணாகுதி, தீபாராதனை, ப்ராசாதம் வழங்குதல் |
| | மதியம் | யந்திர ப்ரிதிஷ்டை மருந்து சாத்துதல் |
| வைகாசி 9 (23.5.2013) வியாழன் | மாலை 6 மணக்கு | விசேஷ சந்தி, மூன்றாம் கால யாகபூஜை ஆரம்பம், திரவ்யாகுதி ஹோமம் |
| | இரவு 9 மணிக்கு | பூர்ணாகுதி தீபாராதனை, ப்ரசாதம் வழங்குதல் |
| வைகாசி 10 (24.5.2013) வெள்ளிக் கிழமை | அதிகாலை 4.30 மணிக்கு | விக்னேஸ்வரர் பூஜை, நான்காம் கால பூஜை ஆரம்பம் |
| | காலை 6 மணிக்கு | பூர்ணாகுதி தீபாராதனை |
| | காலை 6.30 மணக்கு | யாத்ராதானம் கடம்புறப்பாடு |
| | காலை 7 மணிக்கு | விமான கோபுரம் பூஜை, கும்பாபிஷேகம், தீபாராதனை |
| | காலை 7.20 மணிக்கு | மூலவர், சுவாமிகளுக்கு மஹா கும்பாபிஷேகம் தீபாராதனை ப்ரசாதம் வழங்குதல் |

சர்வசாதகம்: சிவாகம ரத்தினம், பட்டீஸ்வரம் ஆர். பாபு குருக்கள்

## சிறப்பு நிகழ்வுகள்

23.05.2013 மாலை 4 மணிக்கு காஞ்சி காம கோடி பீடத்தின் ஆஸ்தான வித்வான் தேஞ்சிபுரம் திரு. B. பாஸ்கரன் அவர்களின் நாமசங்கீர்த்தனம்

இரவு 7 மணிக்கு **டாக்டர் சீர்காழி G. சிவசிதம்பரம்** அவர்களின் தேவ கான கச்சேரி

24.05.2013 காலை 8.00 மணி ஷண்மத சுவாமிகள் ஊர்வலம்

காலை 9 மணி முதல் **பாரத தத்துவ மாநாடு.** இதில் 15 பேரறிஞர்கள் சிறப்புரையாற்றுகிறார்கள்.

மதியம் 11.00 மணி ஊர் விருந்து அழைப்பு ஊர்வலம். அவ்வமயம் தவத்திரு சுவாமி ஓங்கார நந்தா அவர்கள் அருளிய **ஞானகீதை** என்ற அருள் நூல் யானையின் மேல் ஊர்வலமாக வரும்.

24.05.2013 இரவு 9 மணிக்கு கேரள பஞ்ச வாத்தியம் நிகழ்ச்சி நிகழும்.

இரவு 10.00 மணி பரப்பிரம்ம சற்குரு ஓம்ஸ்ரீ சித்தர் சுவாமிகள் ஊர்வலம்

**தவத்திரு சுவாமி ஓங்கார நந்தா அவர்கள் அருளிய "நடைபாதை கீதை" என்ற நூலின் இந்தி மொழிபெயர்ப்பான 'ஓங்கார வாணி' என்ற நூல் வெளியிடு**

**நூலை வெளியிடுபவர்: திருமிகு. S. ராஜா போன்ஸ்லே சத்ரபதி B.E அவர்கள், தஞ்சாவூர்.**

**நூலைப் பெறுபவர்: சிவஸ்ரீ குமார் ராகவன் அவர்கள், பெங்களூர்.**

## சிறப்பு அழைப்பாளர்கள்

திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதினம் 24வது குருமகா சந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்**
கயிலை மாமுனிவர் **திருவளர்திரு காசி வாசி முத்துகுமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள்** அவர்கள், அதிபர், காசி திருமடம், திருப்பனந்தாள்
முனைவர் **ஸ்ரீமத் குமாரசாமி தம்பிரான் சுவாமிகள்** அவர்கள், கட்டளை விசாரணை, தருமபுர ஆதினம்
**ஸ்ரீலஸ்ரீ வீரராகவ சுவாமிகள்** அவர்கள், நிறுவனர், ஸ்ரீ பஞ்சமுக ஆஞ்சநேயர் சேவா டிரஸ்ட், சிவராமபுரம்
முனைவர் **M. திருமலை** அவர்கள், துணை வேந்தர் தமிழ்ப் பல்கலைக் கழகம். தஞ்சாவூர்
முனைவர் **K.T. தியாகராஜன்** அவர்கள், முதல்வர் A.V.C கல்லூரி, மயிலாடுதுறை
திருமிகு. **க. அன்பழகன்** M.L.A., அவர்கள், கும்பகோணம்
டாக்டர் **கோவி. செழியன்** M.L.A., அவர்கள், திருவிடைமருதூர்
திருமிகு. **ராயாஸ். கோவிந்தராஜன்** அவர்கள், அதிபர் ராயாஸ் குழுமம்
டாக்டர் **ரத்தின. ஜனார்த்தனன்** அவர்கள், புதுச்சேரி
திருமதி **யசோதா ராமலிங்கம்** அவர்கள், பஞ்சாயத்து தலைவர், சீனிவாசநல்லூர்

## கும்பாபிஷேக விழாக்குழு

**தவத்திரு சுவாமி ஓங்காரநந்தா அவர்கள்**, ஓங்கார ஆசிரமம்
துணைத் தலைவர் சிவஸ்ரீ **குமார ராகவன்** அவர்கள், பெங்களூர்
திருமிகு **K. விஜய் ராகவன்** அவர்கள், பெங்களூர்
தவத்திரு சுவாமி **கோடீஸ்வரானந்தா** அவர்கள், ஓங்கார ஆசிரமம்
அன்புமிகு **முருகு மாணிக்கம்** அவர்கள், மூத்த வழக்கறிஞர், மயிலாடுதுறை
திருமிகு. **செ. இராமலிங்கம்** Ex. M.L.A அவர்கள், ஸ்ரீனிவாச நல்லூர்
திருமிகு **ஜெகவீரபாண்டியன்** Ex M.L.A., அவர்கள், மயிலாடுதுறை
திருமிகு **V. ராஜமோகன்** அவர்கள், கும்பகோணம்
டாக்டர் **R. அருண்குமார்** அவர்கள், M.D., சென்னை
திருமிகு **T. நாராயணசாமி** அவர்கள், வழக்கறிஞர், கும்பகோணம்
திருமிகு **R. செல்வம்** அவர்கள், கருப்பசாமி தோட்டம், சீனிவாசநல்லூர்
திருமதி **அன்புமணி சேகர்** அவர்கள், சீனிவாசநல்லூர்

கும்பாபிஷேக வர்ணனை: திருமிகு **ராம அரங்கசாமி** அவர்கள், M.Com.,D.Co-op., D.L.L., தஞ்சாவூர்.

சத்யம் தர்மம் நியாயம் திருச்சிற்றம்பலம் எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க